**DATE: 20.02.2025** சாட்சி விசாரணை தொடங்கிய நேரம்: 02.31P.M

MCOP NO: 521/2023

ம.சா. 1

பெயா். சரவணகுமாா்

த/பெ. சாமுவேல்

வயது. 42

**முதல் விசாரணை**

**முதல் விசாரணை வழக்கறிஞர் K.பபிதா என்பவர் விசாரணை செய்தார்.**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 13 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிா்மனுதாரா் தரப்பில் அரசு வழக்கறிஞர் S.சிவக்குமாா் என்பவர் குறுக்கு விசாரணை செய்தார்**

மனுவில் கூறியப்படியும், சத்தியபிரமாணத்தில் கூறியப்படியும் விபத்து நடைபெறவில்லை என்றால் சாியல்ல. இறுதி அறிக்கை, மாதிாி வரைபடம் தாக்கல் செய்யவில்லை. விபத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனத்தின் ஆா்.சி புத்தகம், இன்சுரன்ஸ் காப்பி தாக்கல் செய்யவில்லை. சாமியாா் மடத்தில் இருந்து செங்குன்றம் நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றேன். அப்போது பின்னால் வந்த பேருந்து மோதி எனக்கு காயங்கள் ஏற்பட்டது. நேராக சென்றுக்கொண்டிருந்த போது வலதுபக்கம் நான் திரும்பினேன். அப்போது பேருந்து மோதிவிட்டது. முன்னால் பழுதாகி பேருந்தை பாா்த்து திடீரென்று நான் வலது புறம் திரும்பி அதனால் விபத்து ஏற்படுவதற்கு நான் தான் காரணம் என்றால் இல்லை. செங்குன்றத்தில் உள்ள ஆா்.டி.ஜீ மருத்துவமணையில் முதல் சிகிச்சை எடுத்துகொண்டேன். அன்று இரவே என்னை அனுப்பிவிட்டாா்கள். அதன் பிறகு வனஜா மருத்துவமணையில் சிகிச்சை பெற்றேன். 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு கீழ்பாக்கம் முருகன் மருத்துவமணையில் சிகிச்சை பெற்றேன். 4 நாட்கள்

அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனக்கு தலையிலும், இடதுமேற்கையிலும், இடது காலிலும் காயங்கள் ஏற்பட்டன. கையில் பிளேட் வைக்கப்பட்டு அதன் பிறகு எடுத்து விட்டார்கள். மருத்துவசெலவாக ரூ2,12,548/- பில் தாக்கல் செய்திருக்கிறோம். எனக்கு முற்றிலும் குணமடைந்து விட்டது என்றால் இல்லை. தொழில், வருமானம், வருமான இழப்பு குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றும் அதனால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

சாட்சி விசாரணை முடியுற்ற நேரம் : 02.43P.M